**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4064/ஆ5/2025, நாள்.13/08/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – 2025 தேசிய அறிவியல் கருத்தரங்கு (National Science Seminar) – 8 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளி அளவில் மற்றும் ஒன்றிய அளவில் அறிவியல் கருத்தரங்கு நடத்தி – ஒன்றிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் அனுப்ப – கோருதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப் பணி திட்டம்) கடித ந.க.எண்.047567/எம்2/ எஸ்2 / 2025, நாள்.07.08.2025

*****

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணி திட்டம்) கடிதத்திற்கிணங்க, அறிவியல் கருத்தரங்கினை (Science Seminar) 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளி அளவில், ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் கீழ்காணும் அட்டவணைப்படி நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் அறிவியல் கருத்தரங்கு சேலம் மாவட்டத்தில் செப்டம்பர் 2025 மாதத்திலும் , தேசிய அளவில் பெங்களூரில் அக்டோபர் 2025 மாதத்தில் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| School Level | 21th August 2025 |
| Block Level | 30th August 2025 |
| District Level | 3rd September to 10th September 2025 |
| State Level | 15th September to 30th September 2025 |

எனவே, பள்ளிகளில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளி அளவில் 21.08.2025 அன்று அறிவியல் கருத்தரங்கு நடத்தப்பட்டு அதில் முதல் இடம் பிடித்த மாணவர்கள் விவரங்கள் பள்ளிகளிடமிருந்து பெற்று 30.08.2025 அன்று ஒன்றிய அளவில் அறிவியல் கருத்தரங்கு நடத்தி அதில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் விவரங்கள் 02.09.2025 அன்று மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்பிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) ஒன்றிய அளவிலான கருத்தரங்கினை கலந்தாலோசித்து ஒருங்கிணைந்து நடத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

**The topic of the National Science Seminar is "Quantum Age Begins: Potentials and Challenges".**

இணைப்பு –

1. பார்வையின் கடித நகல்
2. Rules and Regulations

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
   (நாட்டுநலப் பணி திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
   அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலைப் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள். வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)